**தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள்,முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக் கூற்றின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் சரியானதாக தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாக காணப்பட்டதுடன், முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால்

செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரிசீலிக்கும் பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும, இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம் பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெற வேண்டிய தொகைகிடைக்க வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரைப்பட தயாரிப்பு கடன்,திரையரங்கு கடன் மற்றும் கொவிட் -19 திரையரங்கு கடன் அடங்கலாக மொத்தம் ரூபா 71,648,272 தொகை 5 வருடங்களைத் தாண்டிய கடன் மீதி ரூபா 71,024,268 ஆக இருந்ததுடன், இதில் ரூபா 64,602,413 20 வருடங்களைத் தாண்டி இருந்தது.கைத்தொழில் சரிவடைதல், முகாமைத்துவம் கடன்களை அறவிடுவதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்காமை போன்ற நிலைமையின் மீது அத் தொகையை அறவிட முடியாமலிருந்தது. மொத்த கடன் பெற வேண்டிய கடன் மீதியான ரூபா 67,177,716 இன் 93 சதவீதமான ஐயக்கடன் ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது கடந்த ஆண்டு கணக்காய்வு விசாரணையின் மூலம் இதுபற்றி சுட்டிக் காட்டப்பட்டது. ஆனால் மீளாய்வு ஆண்டில் நடைபெற்ற நிர்வாக சபை கூட்டத்திலும் இந்த அறவிடப்படாத கடனை அறவிடுவது பற்றி எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகள் பற்றி கவனம் செலுத்தப்படவில்லை. | திரையரங்குகள் நவீன தொழில்நுட்பத்துடன் ப்ரரொக்ஸென் நடவடிக்கை மேற்கொள்வதால் 35mm சினிமாவை காட்சிப்படுத்து-வதற்கான வாய்ப்பும் குறைந்துள்ளதுடன், இந்த படங்கள் 35mm சினிமாவாக இருப்பதால் மீள் காட்சிப்படுத்தி கடன் அறவிடும் சாத்தியமும் இழக்கப்பட்டுள்ளது. எதிர்காலததில் தொலைக்காட்சி அலைவரிசை மற்றும் யுட்யுப் அலைவரிசை மூலம் படங்களை காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பழைய நிலுவைகளை அறவிடுவதற்கு உடனடியாக முகாமைததுவ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023 திசம்பர் 31இல் உளளவாறு இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தின் நிதியத்துக்கு பெற வேண்டிய வாடகை வருமானம் ரூபா 26,393,457உம், திரைப்படம் காட்சிப்படுத்தியதற்கான வருமானம் ரூபா 3,532,156உம் அடங்கலான மொத்தம் ரூபா 31,523,282 உம் மீதியாகரூபா 23,002,208 வருடங்களை 5ஐக் கடந்த போதிலும், முகாமைத்துவத்தினால் இப்பணத்தை உடனடியாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வேகந்த வலவ்வ மற்றும் நிசலகிர திரைப்படத்துக்கு வருமானம் ஈட்ட முடியவில்லை ஆதலால், இந்த நிலுவைத் தொகையை வசூலிப்பது முடியாத விடயமாக உள்ளது. எதிர்காலததில் தொலைக்காட்சி அலைவரிசை ஊடாக காட்சிப்படுத்தி வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனம் பெற வேண்டிய நிலுவைத் தொகைளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) கொவிட் - 19 தொற்று காரணமாக செயலிழந்த திரையரங்குகளுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகைக்கான ஒப்பந்தம் 09வது பந்தியின் பிரகாரம் கடனை அறவிட தவறியதன் காரணமாக 2024 ஜுலை 31ஆந் திகதியின்போது மேலும் ரூபா 189,426 தொகை அறவிட வேண்டியிருந்தும் 2022 திசம்பர் 22இல் முடிவடைந்த கடன் ஒப்பந்த காலத்தை நீட்டிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2020ஆம் ஆண்டில் கடனைப் பெற்ற திரையரங்குகளில் இருந்து அறவிட வேண்டியுள்ள தவணை நிலுவைகளுக்கு எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தத்தின் பிரகாரம் கடனை அறவிடுவதற்கும், ஒப்பந்த காலத்தை நீட்டிக்கவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தினால் தயாரிக்கப்பட்ட ஆகந்துகயா மற்றும் தனவர்ன திரைப்படங்களுக்கு இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்துக்கு ரூபா 1,360,404உம் உற்பத்தி செலவினமாக செலுத்த வேணடியுள்ளதுடன் 05 வருடங்களுக்கு மேலாக இருந்துவ வரும் இந்த நிலுவையை உடனடியாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இத்தொகையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய தொகைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 20,890,342 ஆன மிகை ஒன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 12,976,126 தொகை ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 7,914,216ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் முதலீட்டு வட்டி ரூபா 7,695,400 இனாலும் ஏனைய வருமானம் ரூபா 134,992 இனால் அதிகரித்து நிறுவனத்தின் நிர்வாக செலவு ரூபா 103,494 குறைந்துள்ளமை இந்த வளர்ச்சிற்கு முக்கிய காரணமாக இருந்தது

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறன் இன்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1996 ஒக்தோபர் 24ஆந் திகதிய 946/9ஆம் இலக்க விசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்ட 1971ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்டத்தின் 61வது மற்றும் 05வது பந்தியின் கீழான கட்டளையில் நிர்வாக சபைக் கூட்டங்கள் எப்படி நடாத்த வேண்டும் எனக் குறிப்பிடப்படாமையால் 2023ஆம் ஆண்டில் ஒரு நிர்வாக சபைக் கூட்டம் மட்டும் நடாத்தப்பட்டதுடன், முன்னைய ஆண்டுகளிலும் இதே நிலைதான் இருந்தது. அதன் பிரகாரம், திரைப்பட கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந் நிதியம் நிறுவப்பட்டுள்ள போதும் கட்டுப்பாட்டு சபையினால் திரைப்பட கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக தொடர்ச்சியான பங்களிப்பொன்று வழங்கப்படவில்லை | நிர்வாக சபையின் ஆலோசனையின் பேரில் எதிர்காலத்தில் அபிவிருத்தி நிதியம் வர்த்தமானி திருத்தப்பட்டு முறையான பணியை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. | கட்டளைகளை திருத்தம் செய்ய கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) | மேற்குறித்த கட்டளையின் பிரகாரம் முன்னெடுக்கப்பட வேண்டிய எந்த பணியையும் பணிகளையும் நிதியத்தினால் செயற்படுத்தப்படாத காரணத்தினால் மீளாய்வாண்டில் பணத்தில் எந்தச் செலவும் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் இதற்கமைய 2023 திசம்பர் 31ஆந் திகதிக்கு உள்ளவாறு ரூபா 10,759,729 வங்கி மீதியாக இருந்தது. மேலும் ஜனவரி முதல் திசம்பர் வரையான 12 மாத காலப் பகுதிக்குள் ரூபா 05 மில்லியனுக்கு குறையாத மாதாந்த வங்கி மீதி இருப்பை பயன்படுத்தாமல் நடைமுறைக் கணக்கில் வைத்திருந்த காரணத்தினால் அதிகப்படியான பணத்தை முதலீடு செய்து பெறக்கூடிய வட்டி வருமானத்தை நிதியம் இழந்துள்ளது. | காசோலை கையொப்பம் இடுவதற்கான அதிகாரம் மாற்றப்பட்ட பின் 2024ஆம் ஆண்டில் நிர்வாக குழுவின் அனுமதியின் பேரில் ரூபா 08 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது. | கட்டளைகளை திருத்தம் செய்ய கவனம் செலுத்த வேண்டும். . |

### 3.2 செயற்பாட்டு செயற்திறமையின்கை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் மீளாய்வு ஆண்டில் வைப்பு வட்டி வருமானம் ரூபா 20,507,972 ஆக இருந்தபோது நிதியத்தின் பிரதான வருமானமாக திரைப்படத் தொழிலின் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 2,281,047 குறைந்த மட்டத்தில் இருந்தது. திரைப்படத் தொழிலின் வீழ்ச்சி, இந்த தொழிலை மேம்படுத்துவதற்கு முதன்மை கவனமாக பணத்தை முதலீடு செய்தமையாலும் இந்த நிலைக்கு தள்ளப்பட்டதற்கு காரணமாக இருந்தது. | அமைச்சுக்கள் மாறியதனால் நிர்வாக சபை நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இதன் காரணமாக தாங்கள் சுட்டிக் காட்டியுள்ள விடயங்களுக்கு பயனுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வில்லை. | திரைப்படத் தொழிலின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்கு செலவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1996 ஒக்தோபர் 24ஆந் திகதிய 946/9ஆம் இலக்க விசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்ட 1971ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்டத்தின் 61 மற்றும் 5வது பிரிவின் கீழான கட்டளையின் (4) (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ), (ஒ) மற்றும் (ஓ) வுக்கு அமைய பின்வரும் பணிகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அமைச்சுக்கள் மாறியதன் காரணமாக நிர்வாக சபை நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக நிர்வாக சபைக் கூட்டங்கள் நடாத்தப்படாமையால தாங்கள் சுட்டிக் காட்டியுள்ள விடயங்களுக்கு பயனுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வில்லை. மேலும் நிர்வாக சபைக் கூட்டம் ஒன்று 2023.09.04ஆந் திகதி நடைபெற்றுள்ளது. எதிர்காலத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களில் கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | முகாமைத்தினால் சட்டத்தின் கட்டளைகளின் பிரகாரம் நிதியத்தின் பணிகளை முன்னெடுத்து செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| i. | தேசிய திரைப்படதொழிலுக்கு அவசியமான உபகரணங்கள் மற்றும் மூலப் பொருட்கள் வழங்குவதற்கு மற்றும் உள்நாட்டு ரீதியாக திரைப்படங்கள் தயாரிப்பதற்கு ஆதரவு மற்றும் பக்கபலம் வழங்கல் | | |
| ii. | பார்வையாளர்ளின் மற்றும் திரையரங்குகளில் ஊழியர்களின் வசதிகள் மற்றும் அணுகுவதற்குத் தேவையான வசதிகளை திரையரங்குகளினால் வழங்குவதை உறுதிப்படுத்தல். | -மேற்படி - | -மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| iii. | திரைப்படத் தொழிலின் ஏனைய பிரிவுகளையும் மேம்படுத்தல் | மேற்படி | மேற்படி |
| iv. | திரையரங்குகளில் வசதியான இருக்கைகளை வழங்குதல் மற்றும் பார்வையாளர்களின் தேவைக்கேற்ப வசதிளையும் மேம்படுத்தல் | மேற்படி | மேற்படி |
| v. | திரைப் படங்களின் உயர் தரத்தை உறுதிப்படுத்தல், அவற்றின் தயாரிப்பு மற்றும் கண்காட்சிக்குத் தேவையான உபகரணங்களை வழஙகுதல். | மேற்படி | மேற்படி |
| vi. | நிர்வாக சபையினால் தீர்மானிக்கப்படும் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் திரைப் படத்துறையில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கான உதவித் தொகை அல்லது பயிற்சித் திட்டங்களை ஏற்படுத்தல். | மேற்படி | மேற்படி |
| vii. | உயர் தரத்திலான கலைத் திரைப்படங்களை முழுமையாகத் தயாரிப்பதற்கு அல்லது நிர்வாக குழுவினால் நியமிக்கப்பட்ட திரைக்கதை மதிப்பீட்டுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட திரைக் கதைகள் அல்லது அத்தகைய திரைப் படங்களைத் தயாரிக்கும் நோக்கில் விசேட உபகரணங்களை வாடகைக்கு எடுப்பதற்கு இயக்குனர்களுக்கு கடன் வழங்குவதன் மூலம் திரைப் படங்களின் தரத்தை ஊக்குவித்தல் வேண்டும். | மேற்படி | மேற்படி |
| viii. | 05 வருடங்களுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலப் பகுதியில் உள்ளுர் திரைப் படத் தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றும் பத்து திரைப் படங்களுக்குக் குறையாது தயாரித்து முடித்த தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு அவர்களின் திறன்களை மேம்படுத்தவும் கடன் வழங்குதல். | மேற்படி | மேற்படி |
| ix. | திரையரங்குகளை மேம்படுத்தல் மற்றும் நவீனமயப்படுத்துவதற்கும் புதிய உபகரணங்களைப் பொருத்துவதற்கும் கடன் வழங்குதல். | மேற்படி | மேற்படி |
| x. | உற்பத்தி பிரிவினால் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகளைப் பரிசீலித்தல | மேற்படி | மேற்படி |
| xi. | உயர் தரமான படங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கல். | மேற்படி | மேற்படி |

## 4. கணக்களின் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28ஆந் திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 15.1 மூலம் பிரசுரிக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(1) (இ) மற்றும் (ஈ) பிரகாரம் நிதியத்தினால் 2023ஆம் ஆண்டுக்கு வரவு செலவு ஆவணம் சரிபார்க்கப்படவில்லை. அத்துடன் வரவு செலவு திட்டம் ஒன்றை தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாது நிதியத்தின் செலவுகளை மேற்கொண்டிருந்தது | வரவு செலவு ஆவணம் தயாரிக்கப்படவில்லை. 2023இல் அபிவிருத்தி நிதியத்திலிருந்து எதுவித கொடுப்பனவகளும் மேற்ளப்படவில்லை. | நிதியத்தின் நோக்கங்களுக்கு ஏற்ப வரவு செலவு ஆவணம் தயாரிக்கப்பட வேண்டும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் இன்றி எந்தச் செலவும் மேற்கொள்ளலாகது. |